Lifeline

மீண்டும் வாழ்வோம்

கிடம்பெயர்ந்த மக்களுக்கான மனிதாபிமான தகவல் பரிமாற்றம்

Humanitarian Information For IDPs

Vol 1 - No 16 Pages 4 Sunday, 08 June 2008 Free Copy

பாதுகாப்பு கெடுபிடிகளால் பாதிக்கப்பட்டுள்ள மீனவர்கள்

கிழக்கு மாகாணத்தில் ஏற்பட்ட யுத்த சூழ்நிலை காரணமாக திருகோணமலை மாவட்ட மீனவர்கள் தமது மீன்பிடித் தொழிலை செய்து வருவதில் பல சிரமங்களுக்கு முகம் கொடுத்து வருகிறார்கள்.

புதிதாக அறிமுகப் படுத்தப்பட்டுள்ள பாதுகாப்பு நடைமுறைகள் காரணமாக இரவில் மீன் பிடிக்கத் தடை விதிக்கப் பட்டுள்ளது. இதனால் கடலில் மீன் அகப்படுகின்ற நேரத்தில் கடலுக்கு செல்ல முடியாதுள்ளதாக திருகோணமலை வீரநகர் அள்ளை கூட்டுவு சங்கத்தின் தலைவர் குலசேகரன் தெரிவிக்கிறார்.

மீன்பிடித் தொழில் ஈடுபடும் திருகோணமலை மாவட்ட மீனவர்கள்

அதிகாலை 4 மணி முதல் 5 மணிவரையே அதிகளவான மீன்கள் பிடிக்கப்படுவதாகவும் தற்போதைய பாதுகாப்பு நெருக்கடிகளால் குறிப்பிட்ட நேரத்திற்கு மீன்கள் அதிகளவில் காணப்படும் பகுதிக்கு செல்ல முடியாதுள்ளதாக அவர் ஆதாங்கப்படுகின்றார்.

இதேவேளை பகலில் மீன் பிடிப்பதில் ஏற்படுகின்ற செலவுகளை அதிகளவில் மீன்கள் கிடைத்தால் மட்டுமே ஈடு செய்ய முடியம என்றும் இல்லாவிட்டால் தமது நிலைமை பரிதாபகரமானது என்று திருகோணமலை ஐமாலியா மீனவர் கூட்டுறவு சங்கத்தின் செயலாளர் சாவுல் ஹமீத் கூறினார்.

தாங்கள் மீன்பிடியில் ஈடுபடுவதற்கு 5000 ரூபாவரை செலவு செய்வதாகவும் அந்த பணத்தை ஈடுசெய்யும் வகையில் மீன்கள் கிடைக்காவிட்டால் பெரும் சிரமங்களுக்கு முகம்கொடுக்க வேண்டி ஏற்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

புகல் பொழுதைவிடவும் இரவில் அதிக எவு மீன்களை பிடிக்க முடியும் எள்பதால். மாலை 4 மணிமுதல் காலை 6 மணி வரைக்கும் மீன் பிடிக்க அனுமதி வழங்கப்ட வேண்டும் என்று அவர் கோரிக்கை விடுத்துள்ளார் .

மீனவர்களோடு அரச நடத்திய கலந்துரையாடலின் பின்பு மீன் பிடிக்கும் காலஎல்லையை அதிகரிப்பு செய்வதாக அறிவித்திருப்பதாகவும்' அது இன்னும் நடைமுறைக்கு வரவில்லை என்றும் தெரிவிக்கப் படுகிறது.

மீனிபிடிப்பதற்கு செல்லும் நேரம் அதிகாலை 4 மணியில் இருந்து அதிகாலை 2 மணியாக மாற்றுவதாக அறிவிக்கப்பட்டுள்ள போதிலும் புதிய நேரமாற்றம் இது வரை நடைமுறைப்படுத்தப்படவில்லை.

ஆரம்பத்தில் 2 மாதங்கள் வரைதான் புதிய கட்டுப்பாட்டு நிலை நீடிக்கும், என்றும் அதன் பின்னர் வழமைபோல் தொழில் செய்ய முடியும் என்றும் தெரிவிக்கப்பட்டிருந்த போதிலும் தற்போது வரை அந்த நிலை மாறவில்லை என மீனவர்கள் பலரும் கவலை தெரிவித்துள்ளனர்

இந்த விடயம் குறித்து கருத்து வெளியிட்ட திருகோணமலை மீன்படி படகு உரிமையாளர் சங்கத்தின் செயலாளர் நாமல் பிரியதர்ஷன '.இலங்கையர்கள் என்ற விதத்தில் நாம் தேசிய பாதுகாப்பிற்கு முன்னுரிமை வழங்குகிறோம். ஏன்றாலும் அரசு எமது நலன் குறித்தும் யோசிக்க வேண்டும்' என்று கூறினார்

துமிழ் சிங்கள் முஸ்லீம் மீனவர்கள் அனைவர் மீதும் அரசாங்கம் இரக்கம் காணட்ட வேண்டும் என்றும் தமது மேம்பாட்டுக்கு உதவுவதோடு தங்களுடைய வாழ்வாதாரத்திற்கு சில நல்ல திட்டங்களை வகுத்து குடும்பத்திற்கும், குழந்தைகளின் கலவிக்கும் உதவுமாறும் அவர் அரசாங்கத் திடம் கோரிக்கை விடுத்துள்ளனர்

> இலங்கையர்கள் என்ற விதத்தில் நாம் தேசிய பாதுகாப்பிற்கு முன்னுரிமை வழங்குகிறோம். ஏன்றாலும் அரசு எமது நலன் குறித்தும் யோசிக்க வேண்டும்' என்று கூறினார்

மீண்டும் வாழ்வோம் நிகழ்ச்சியானது சூரியன் எப்.எம். வானொலி ஊடாக சனிக்கிழமைகளில் காலை 6.00 முதல் 8.00மணி வரையும் கிழக்கு மாகாணத்தில் பிறை எப்.எம். வானொலி ஊடாக (FM 102 Mhz) ஞாயிற்றுக்கிழமைகளில் பிற்பகல் 1.30மணி முதல் 2.00மணி வரையும். எமது நிகழ்ச்சி ஒலிப்பதிவுகளை www.radio.voicesofpeace.lk என்ற இணையத்தளத்திலும் கேட்கலாம்.

வெற்றி எண்ணங்களை பகிர்ந்து கொள்ளுங்கள்

மீண்டும் வாழ்வோம்

பிறந்த நாள் உங்ள் திருமண நாள்நினைவுகளையும் உங்கள் பயணப்பதிவுகளையும் எமக்கு எழுதி அனுப்பிவையுங்கள். அவையும் மீண்டும் வாழ்வோம் பகுதியில் பிரசுரிக்க காத்திருக்கின்றோம்.

த.பெ.இல. 1039 கொழும்பு
தொ.பே: 077 4952242
www.lifelinesrilanka.com info@lifelinesrilanka.com

சுவடுகள்

✦ அரசாங்க அதிபர்களின் தகவல்களின் அடிப்படையில் திரட்டப்பட்ட IASC 127ஆவது அறிக்கையின் படி இலங்கையில் 72,397குடும்பங்களைச் சேர்ந்த 262,189 பேர் அகதிகளாக இடம் பெயர்ந்த நிலையில் உள்ளனர்.

✦ இடம்பெயர்ந்த 200 குடும்பங்கள் பூநகரி பிரதேசத்தில் 22ஆம் திகதி மே மாதம் மீள் குடியேற்றம் செய்யப்பட்டுள்ளதாக கிளிநொச்சி மாவட்ட செயலகம் தெரிவித்துள்ளது. மாந்தை மேற்கு பிரதேசத்திலிருந்தே அதிகளவான இம் மக்கள் இம்பெயர்ந்தமை குறிப்பிடத்தக்கது. துணுக்காய், மாவளி மற்றும் பூநகரி பிரதேசங்களில் உள்ள மக்களின் அவசர தேவைகள் குறித்து ஆராய்வதற்காக ZOA, UNHCR மற்றும் UNOPS ஆகிய அமைப்புகளிலிருந்து தகவல்களைத் திரட்டுவதற்காக குழுக்கள் நியிக்கப்பட்டுள்ளன.

✦ World Vision அமைப்பானது தெரிவு செய்யப்பட்ட குடும்பங்களின் வாழ்வாதாரங்களை மேம்படுத்துவதற்காக வவுனியா வடக்கு பிரதேச செயலகத்துடன் இணைந்து பல்வேறு திட்டங்களை முன்னெடுத்து வருகிறது. கிராமங்களில் காணப்படும் உள்வீதிகள், வீட்டுத் தோட்டம், பொதுக்கிணறுகளை புனரமைத்தல், பாடசாலை நிலங்களை பண்படுத்தல், விளையாட்டு மைதானங்களை புனரமைத்தல், மற்றும் தொழில்நுட்ப கற்கை நெறிகளை அறிமுகப்படுத்தல் ஆகிய செயற்பாடுகள் அமெரிக்க நாட்டின் நிதியுதவியுடன் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

✦ திருகோணமலை மாவட்டத்தில் அன்மைமில் இடம்பெற்ற வாழ்வாதாரக் கூட்டத்தில் மீனவர்களின் இன்னல்கள் தொடர்பில் ஆராயப்பட்டது. ஆண்மைமில் விதிக்கப்பட்ட மீன்பிடி தடை காரணமாக 11,000 குடும்பங்கள் பாதிப்புற்றதாகத் தெரிவிக்கப்படுகிறது. திருக்கடலூரைச் சேர்ந்த 560 குடும்பங்களும், கின்னியாவில் 7500 குடும்பங்களும் மூதூர் பிரதேசத்தில் 2940 குடும்பங்களும் கஷ்டப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது. இம் மீனவர்களின் பொருளாதார நிலைமை மிகவும் பாதிப்படைந்துள்ளதாகவும் தலி நபர்களின் உணவு நன்கொடை சில குடும்பங்களுக்கு மட்டுமே கிடைப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

பேசும் படம்

வவுனியா செட்டிக்குளம் பிரதேசசெயலாளர் பிரிவுக்குட்பட்ட மீள்குடியேற்ற கிராமமான கந்தசாமிபுரத்தில் வசிக்கும் க. சின்னையா (இடது) மு.ராமசாமி (வலது) ஆகியோரையே படத்தில் காண்கின்றீர்கள். இவர்கள் அநுராதபுரம், சாந்தசோலை ஆகிய இடங்களிலிருந்து இடம்பெயர்ந்தவர்களாவர். 2005 ஆம் ஆண்டு இவர்கள் இந்த கிராமத்தில் மீள்குடியேறப்பட்டுள்ளனர். இங்கு 29 குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றனர். இதில் வயோதிபர்கள், பெண்கள் மற்றும் குழந்தைகளுமே அதிகமாக காணப்படு கின்றனர்.

மீண்டும் வாழ்வோம்

'மீண்டும் வாழ்வோம்' திட்டமானது இலங்கையின் அசாதாரண சூழ்நிலைகளால் இடம்பெயர்ந்து முகாம்களில் வாழும் மக்களுக்காகவும் மீள்குடியேறி உள்ளவர்களுக்காகவும் தகவல்களை வழங்கும் பரந்துபட்ட மனிதாபிமான செயல்த்திட்ட அமைப்புக்களின் ஒரு அங்கமாகும்.

த.பெ.இல. 1039 கொழும்பு
தொ.பே: 0774952242
மின்அஞ்சல்: info@lifelinesrilanka.com

பெண்களும் ஊடகமும்

வவுனியா மாவட்டத்தில் பெண்களிற்கு எதிராக அனைத்து வன்முறைகளையும் முடிவுக்கு கொண்டு வரும் '"WECAN" ' (எம்மால் முடியும்) பிரச்சாரத் திட்டமானது கடந்த ஆறு வருடங்களாக OXFAM நிறுவனத்தின் அனுசரணையுடன் அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களை ஒன்றிணைத்து ஆண்கள் மற்றும் பெண்கள் மத்தியில் சிறந்த முறையில் முன்னெடுத்துச் செல்லப்படுகின்றது. இவ் பிரச்சாரத்திட்டத்தின் செயற்பாடுகளாக நிறுவனங்களிடையே பெண்களிற்கு எதிரான வன்முறைகளைக் குறைப்பதற்காக குரல் கொடுப்பவர்களை ஒன்றிணைத்து வலைப்பின்னலை உருவாக்குதல் பெண்களிற்கு எதிரான வன்முறையினை குறைப்பது தொடர்பான வழிப்புணர்வுகளை கிராம மட்டங்களில் ஏற்படுத்தல் சிறந்த மாற்றுணர்களை உருவாக்குதல் போன்ற செயற்பாடுகளை நடைமுறைப்படுத்தி வருகின்றது.

வவுனியா மாவட்டத்தில் நடைபெற்ற பெண்களும் ஊடகமும் பயிற்சி வகுப்பில் கலந்து கொண்டோர்.

வவுனியா மாவட்டத்தில் பெண்களிற்கு எதிராக வன்முறைகளை குரல் கொடுப்பதற்காகவும் பெண்கள் தொடர்பான நம்பிக்கை மனப்பாங்கு நடத்தையில் மாற்றங்களை கொண்டு வந்து மக்களிடையே மாற்றத்தை ஏற்படுத்துவதற்காகவும் சுமார் 3874 நபர்கள் மாற்றங்களை ஏற்படுத்துவதற்காக செயற்பட்டு வருகிறார்கள் துணர்களாக செயற்பட்டு வருகிறார்கள். இன்றைய காலத்தில் ஊடகங்கள் சமூக முன்னேற்றத்திற்கு முக்கியப் பங்கு வகிக்க வேண்டிய தேவை உள்ளதால் இச் செயற்திட்டத்தினை ஊடகத்தினூடாகவும் விரிவாக்கி முன்னெடுத்து செல்வதற்காக நாம் இப் பிரச்சாரத்திட்டத்தில் இணைந்து செயற்படும் அங்கத்தவர்களிற்கு 'பெண்களும் ஊடகமும்' என்ற தலைப்பில் இரண்டு நாட்களை கொண்ட் பயிற்சியினை நடாத்தினோம்.

பங்குபற்றுனர்களுக்கு 'பெண்களும் ஊடகமும்' தொடர்பான அறிவினைக் கூட்டுவதனூடாக பெண்கள் எதிர்நோக்கும் பிரச்சனைகளை ஊடகங்களினூடாக வெளிக்கொணர்ந்து பெண்களிற்கு எதிரான வன்முறையை எல்வாறு குறைக்கவாம் என்ற அறிவினை வழங்குமுகமாக கிராம மக்கள்இ அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவன ஊழியர்கள் ஊடகவியளாளர்கள் பாடசாலை ஆசிரியர்கள் ஆகியோருடன் மட்டகளப்பு திருகோணமலை மாவட்டங்களில் இருந்தும் மாற்றங்களை ஏற்படுத்தும் அங்கத்தவர்களும் இப் பயிற்சி நெறியில் கலந்துக் கொள்டனர்.

> வவுனியா மாவட்டத்தில் பெண்களிற்கு எதிரான வன்முறைக்கு குரல் கொடுப்பதற்காகவும் பெண்கள் தொடர்பான நம்பிக்கை மனப்பாங்கு நடத்தையில் மாற்றங்களை கொண்டு வந்து மக்களிடையே மாற்றத்தை ஏற்படுத்துவதற்காகவும் சுமார் 3874 நபர்கள் மாற்றங்களை ஏற்படுத்துவதற்காக செயற்பட்டு வருகிறார்கள்

நான்கு நாட்களை கொண்ட இரு அமர்வுகளில் 80 அங்கத்தவர்கள் பங்குப்பற்றினர்.

இவ் அமர்வனாது பங்கு பற்றுனர்கள் ஒவ்வெருவகும் தமது பெறுமதியினை உணர்ந்துக் கொள்வதனை நோக்கமாகக் கொண்டதுடன் உன்மைச் சம்பவங்களின் பகுப்பாய்வு அனுபவ பகிர்வு ஊடகங்கள் தொடர்பான மக்களின் கண்ணோட்டம் ஊடகங்களின் செயற்பாடுகள் கட்டமைப்பு செய்திகள் ஊடகத்திற்கு அனுப்பக் வடிவங்கள். மற்றும் பெண்கள் தொடர்பான சமூக கலாச்சார விடயங்களை உள்ளடக்கியதாக அமைந்தது.

வாழ்வின் வர்ணங்கள்

புத்தளம் சபா மருவா இடம்பெயர்ந்தோர் முகாமில், மே மாதம் 24ஆம் திகதி நேரடி கலை நிகழ்ச்சியைக் காண வந்த அனைவரையும் **றைனா மொஹமட் பரபா**வின் வசீகரக் குரல் மெய்சிலிர்க்க வைத்தது.

புத்தளம் நூர் பள்ளியில் வசிக்கும் 53 வயதான றைனா மொஹமட் பரபா ராணுவன் இல்லாமிய கீதம் பாடுவதை தனது தொழிலாக செய்து வருகிறார்.

தனது வாழ்வின் வர்ணங்களை றைனா மொஹமட் பரபா எம்முடன் பகிர்ந்து கொண்டார்..

'நாங்கள் நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டு பாடுவதை பரம்பரையாக செய்து வருகின்றோம். பல இல்லாமிய நிகழ்ச்சிகளுக்கு கூப்பிடுவார்கள். நாங்கள் சென்று அந்த நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டு சிறப்பிப்போம். இது எங்களுடைய பரம்பரைக் கலை. இதை மக்களுக்கு எடுத்துக் காட்டுகிறோம். என்னுடைய தந்தையார் இல்லாமில் வாய்பா வரனொளியில் 100நாட்கள் இவ்வரானா பாடல்களைப் பாடியிருக்கின்றார். தற்போது இந்த மாதிரி நிகழ்ச்சிகளை நான் மட்டும்தான் நடத்தக்கொண்டிருக்கின்றேன். அந்தக் காலத்தில் நாங்கள் படிக்கின்ற போது வானொலி தொலைக்காட்சி எல்லாம் கிடையாது. அப்போது கூட என்னுடைய உறவினர்கள் இந்நிகழ்ச்சிகளை நடத்தினார்கள். எம்முடைய பிள்ளைகள் வியாபாரத்தில் ஈடுபடுகிறார்கள். அவர்களுக்கு இதில் விருப்பம் இல்லை. ஆகவே என்னோடு இந்தக் கலை நின்றுவிடும்'.

சாளரம்

மன்னார் மாவட்டத்தில் 1990 ஆம் ஆண்டு இடம்பெற்ற உள் நாட்டு பிரச்சினைகள் காரணமாக இடம்பெயர்ந்த முஸ்லிம் மக்கள் புத்தளம் மாவட்டத்தில் உள்ள அகதி முகாம்களில் வாழ்ந்து வருகின்றனர். இவர்களுக்கு வீடு கட்டுவதற்கான நிதி யுதவியினை World Bank நிறுவனம் தற்போது வழங்கி வருகின்றது. இதனூடாக உதவி பெற்ற மற்றும் பெறாத சிலர் தமது கருத்துக்களை சாளரம் நிகழ்ச்சிக்காக பகிர்ந்து கொள்கின்றனர்.

ஆரம்பகாலத்தில் யாரும் எங்களுக்கு உதவ வில்லை. அதன் பின் அஷ்ரப் MP மூலமாக காணிகள் கிடைத்தது. எல்லோரும் அதில் குடிசை போட்டு இருந்தோம். பின்னர் MP ரிஷாட் பதியுதீன் அவர்கள் மூலம் வீட்டுத் திட்டம் கிடைத்தது. தற்போது வீடுகளைக் கட்டி வாழ்ந்துகொண்டிருக்கிறோம். அதுவும் இன்னும் கட்டி முடிக்கப்படவில்லை. வீட்டுத் திட்டம் மூலம் இன்னும் கொஞ்சம் பண உதவி கிடைக்கவுள்ளது. அது கிடைத்தாலும் போதாத நிலையில்

World Bank நிறுவனத்தினால் கட்டப்பட்ட வீட்டின் தோற்றம்

தான் இருக்கிறது.

சிலர் வீட்டு வேலைகளை கடன் வாங்கி செய்து வருகிறோம். பண உதவியை விரைவில் செய்ய வேண்டும். எங்களுக்கு 2 இலட்சம் ரூபாய் வீட்டுத்திட்டத்தின் மூலம் தந்திருக்கிறார்கள். இன்னும் 60,000 ரூபாய் தரவேண்டியுள்ளது. இருந்தாலும் அது போதாது. அதற்கும் அதிகமாக கடன்பட்டு இந்த வீடுகளை கட்டிக்கொண்டிருக்கின்றோம். அரிசி விலையும் அதிகரித்து விட்டது. இந்த நிலையில் தான் எங்கள் வாழ்க்கை சென்று கொண்டிருக்கிறது. இருந்த வீட்டையும் இடித்து விட்டோம். ஆக கடன் வாங்கியாவது இந்த வீட்டைக் கட்டி முடிக்க வேண்டிய நிலையில் இருக்கின்றோம்.

மொஹமட் சிஷ்வான் - மன்னாரிலிருந்து வந்து இங்கு இருக்கின்றோம். வீடு இல்லை. எனவே என் தந்தையின் வீட்டில் இருக்கின்றோம். எனக்குத் திருமணம் ஆகி விட்டது. என் தந்தையின் வீடோ 10 பேச்சல் அளவுதான். அதில் தான் இருக்க வேண்டிய நிலை. வீட்டுத் திட்டம் மூலமாக வீடு தருவதற்கு பதிவு செய்திருக்கிறார்கள். எங்களிடம் காணி இல்லை. காணி இருப்பவர்களுக்கு மட்டும்தான் பணம் கொடுத்தார்கள். எங்களிடம் காணி வாங்க பணம் இல்லை. ஆகவே வீட்டுத் திட்டம் எங்களுக்குக் கிடைக்கவில்லை.

சட்ட ஆவணங்களின் முக்கியத்துவமும் அவற்றை பெற்றுக் கொள்வதற்கான வழிமுறைகளும்

இன்றைய நவீன உலகில் சட்ட ஆவணங்களின் முக்கியத்துவம் அதிகரித்து வருகின்றது.சட்ட ஆவணங்களின் பயன்பாடு மனிதனின் அன்றாட வாழ்வில் பாரிய தாக்கத்தை ஏற்படத் வருகின்றது.

இலங்கையில் சட்ட ஆவணங்கள் இன்னும் முக்கியத்துவம் மிக்கதாக மாறியுள்ளபோதிலும் அவற்றை பெறுவதற்கான வளிமுறைகள் குறித்தும் அவற்றின் தேவைகள் குறித்தும் சிலர் போதுமான தகவல்களை கொண்டுருக்கவில்லை என்ற தகவல் நம்மை சிந்திக்க வைக்கின்றது

வவுனியாவில் உள்ள துட்டுவாகை மீள் குடியேற்றக் கிராமத்திற்கு எமது குழுவினருடன் விஜயம் செய்த போது தனது கணவனுடன் இணைந்து பிள்ளைகளின் தேவைகளை கவனித்துக் கொண்டுருந்த அன்னக்கிளியை சந்தித்தோம்

24 வயதான அலியார் அன்னக்கிளி மூன்று பிள்ளைகளின் தாயாரவார். உள்நாட்டு யுத்தம் காரணமாக இடம்பெயர்ந்து இந்தியா சென்று கடந்த 5 வருடங்களுக்கு முன்னரே அவர் இலங்கை திரும்பினார். வாழ்க்கைத் துணையை அதி முகாமிலேயே தேடிக்கொண்ட அவர் 8 ஆண்டுகளுக்குப் பின்னரே திருமணத்தை பதிவு செய்துள்ளார்.

உரிய ஆவணங்கள் இல்லாமையால் தமக்கு ஏற்பட்ட அனுபவங்களை அன்னக்கிளி எம்முடன் பகிர்ந்து கொண்டார்.

' நாங்கள் இலங்கைக்கு 2003ல் வந்தோம். பிறப்பு சான்றிதழ் இல்லாத காரணத்தால் அடையாள அட்டை எடுக்க முடியவில்லை. அதனால் வெளியில் எங்கும் செல்ல முடியாத நிலை இருந்தது. பிள்ளைகளை பள்ளியில் சேர்க்க முடியாமல் இருந்தது. இந்தியாவில் இத்தகைய பிரச்சினை இருக்கவில்லை. இதை எல்லாம் செய்வதற்கு எமக்கு திருமண பதிவுதான் தேவைப்பட்டது'

டி.ஆர்.சி.யின் உதவியோடு சட்ட ஆவணங்களைப் பெற்றுக்கொண்ட அலியார் அன்னக்கிளியுடன் கணவர்

என்றார் அவர்.

பிரச்சினைகளின்போது சட்ட ஆவணங்கள் மீது கவனம் செலுத்தாத வர்கள் அவை எந்தவுக்கு அவசிய மானவை என்பதை காலப்போக்கில் உணர்ந்துக் கொள்கின் றனர்.

இந்த ஆவணங்கள் இல்லாதவர்களுக்கு அவற்றைப் பெற்றுக்கொடுக்க DRC என்ற சர்வதேச அரச சார்பற்ற நிறுவனம் முன்வந்துள்ளது. இந்நிறுவனத்துடன் உள்நாட்டு அரச சார்பற்ற நிறுவனமான FOSDOவும் இணைந்து செயற்படுகிறது.

ஆவணங்களின் முக்கியத்துவம் குறித்து அந்நிறுவன பாதுகாப்புக் கள உத்தியோகத்தரான மெக்டலின் ஞ்சைநாதர் கருத்து வெளியிடும் 'பிறப்புச் சான்றிதழ் குறிப்பிட்ட நபர் இலங்கையர் என்பதை உறுதிப்படுத்தும். ஏனைய ஆவணங்களை எடுப்பதற்கும் பிறப்புச் சான்றிதழ் மிகவும் முக்கியமானது. தான் யார் என்பதை அடையாளப்படுத்துவதற்கு ஒரு பிள்ளைக்கு உரிமை இருக்கிறது. அது எல்லோருக்கும் பொதுவானது'.என்றும் அவர் மேலும் தெரிவித்தார்

இதேவேளை உள்நாட்டு யுத்தம் காரணமாக பல்வேறு இடங்களுக்கு இடம்பெயர்ந்து சென்று வாழ்ந்துக் கொண்டிருக்கும் மக்கள் சட்ட ஆவணங்களின் அவசியம் குறித்து அவற்றை எவ்வாறு பெற்றுக்கொள்வது என்பது குறித்தும் போதிய அறிவற்றவர்களாக காணப்படுகின்றனர் என வவுனியா மாவட்ட காணிப்பதிவாளருக் மேலதிக மாவட்ட பதிவாளரும் மேலதிக உதவிப்பதிவாளர் நாயகமுமான ஆனந்தி ஜெயரட்னம் குறிப்பிடுகின்றார்.

ஆவணங்கள் தொடர்பான போதிய அறிவற்ற இந்த மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் பயிற்சி வகுப்புக்களை DRC நிறுவனம் வழங்கி வருகிறது. அது மட்டுமன்றி கிராமங்களில் பணிபுரியும் சமூக இணைப்பாளர்கள் ஒவ்வொரு வீட்டுக்கும் சென்று சட்ட ஆவணங்களின் முக்கியத்துவத்தை எடுத்துக்கூறுகின்றனர்.

DRC மட்டுமல்ல. இடம்பெயர்ந்த மக்களுக்கு தேவையான சட்ட ஆவணங்களை மேற்கொள்ளும் நடவடிக்கையில் ஏனைய பல நிறுவனங்களும் ஈடுபட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. விழிப்புணர்வு பயிற்சிகளின் பின்னர் தேசிய அடையாள அட்டைக்கு விண்ணப்பித்ததாகவும் விண்ணப்பித்து ஒருவாரத்தில் தேசிய அடையாள அட்டை தனக்கு கிடைத்துள்ளதாகவும் அன்னக்கிளி கூறினார்.

இழந்த சட்ட ஆவணங்களை மீண்டும் பெறுக்கொள்வதாயின் மாவட்ட செயலகத்தையும் நாடலாம். இது குறித்த மேலதிக விபரங்களை பெற்றுக்கொள்வதாயின் மாவட்ட மக்கள்

> **பிறப்புச் சான்றிதழ் குறிப்பிட்ட நபர் இலங்கையர் என்பதை உறுதிப்படுத்தும். ஏனைய ஆவணங்களை எடுப்பதற்கும் பிறப்புச் சான்றிதழ் மிகவும் முக்கியமானது. தான் யார் என்பதை அடையாளப்படுத்துவதற்கு ஒரு பிள்ளைக்கு உரிமை இருக்கிறது. அது எல்லோருக்கும் பொதுவானது**

மேலதிக உதவிப் பதிவாளர் நாயகம் அலுவலகம், வவுனியா மாவட்ட அலுவலகம், வவுனியா. என்ற முகவரியினூடாக அல்லது 024 2222130 என்ற தொலைப்பேசி இலக்கத்தினூடாகவோ தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ளலாம்.

இடம்பெயர்ந்த மக்களுக்கான அரசாங்கத்தின் உதவிகள்

இடம்பெயர்ந்த மக்களுக்கு நிவாரண சேவைகளை மீள் குடியேற்றம் மற்றும் அளர்த்த நிவாரண சேவைகள் அமைச்சு வழங்கி வருகிறது. இம் மக்களுக்கு அமைச்சு வழங்கும் சேவைகள் தொடர்பில் அமைச்சர் ரிஷாட் பதியூதீனுடன் இடம்பெற்ற நேர்காணலின் தொகுப்பு

இடம்பெயர்ந்த மக்களுக்கு சேவை செய்யும்போது ஏற்படும் பிரச்சினைகளை எவ்வாறு தீர்க்கின்றீர்கள்?

பாதுகாப்பு தரப்பினருக்கும் இடம்பெயர்ந்த மக்களுக்குமிடையில் நல்லுறவை ஏற்படுத்துகின்றவிதத்தில் நாங்கள் செயற்பட்டுக் கொள்ளிருக்கின்றோம். அரசாங்க அதிபருக்கும் பாதுகாப்பு தரப்பினருக்குமிடையில் நல்லுறவை ஏற்படுத்துகின்ற, சில உணவுப் பொருட்கள் தாமதமாகச் செல்வதைத் தடுக்கின்ற, கல்வி, சுகாதாரம், சமூக ரீதியான பிரச்சினைகளைத் தீர்த்துவைக்கின்ற செயற்பாடுகளில் ஈடுபடுகின்றோம். அதனால் ஏற்படுகின்ற பிரச்சினைகளுக்கு நாங்கள் முகம் கொடுக்கின்றோம். எம்முடைய அமைச்சின் இணைப்புப் பணிப்பாளர்கள் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் நியமிக்கப்பட்டுள்ளார்கள். அவர்களின் மூலமாக பிரச்சினைகளை இனங்கண்டு தீர்த்துவைக்கின்ற வேலைத்திட்டங்களைச் செய்கின்றோம்.

கிழக்கு மாகாணத்தில் இடம் பெற்று முடிந்த தேர்தலின் பின்னர் உங்களுடைய சேவைகள் எந்த அளவுக்கு முன்னேற்ற மடையும் என்று நீங்கள் எதிர்பாக்கிறீர்கள்?

அப்பிரதேச மக்களால் தெரிவு செய்யப்பட்ட மாகாண சபை உறுப்பினர்கள் மற்றும் உள்ளூராட்சி உறுப்பினர்கள் இருக்கின்ற காரணத்தினால் மக்களுடைய பிரச்சினைகளை இனங்காண்பது எங்களுக்கு இலகுவாக இருக்கும். அதேபோல் மீள்குடியேற்ற நடவடிக்கைகளை நாங்கள் முன்னெடுக்கின்றபோது அந்த மக்களுடைய பிரதிநிதிகளின் ஊடாகச் செய்கின்றபோது அந்த மக்களுக்கு நிறுவ வீதம் பயன் கிடைக்கும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கின்றது.

அமைச்சரென்ற வகையிலே நீங்கள் பல்வேறு பிரதேசங்களுக்கு விஜயம் செய்வீர்கள். அவ்வாறு செல்கின்றபோது வழக்கமாக அங்கிருக்கின்ற மக்கள் உங்களிடம் எவ்வகையான வேண்டுகோள்களை முன்வைப்பார்கள்?

பொருளாதார ரீதியாக அவர்கள் கஷ்டப்படுகின்ற நிலையில் இருப்பதால் தொழில் வாய்ப்புக்கள் பெற்றுத்தர கேட்கின்றார்கள். வீடுகள் இல்லாதவர்கள் வீடுகளைப் பெற்றுத்தர கேட்கின்றார்கள்.

மீள் குடி யேற்றம் மற்றும் அனர்த்த நிவாரண சேவைகள் அமைச்சர் ரிஷாட் பதியூதின்

எங்களால் செய்யக்கூடியதை நாங்கள் செய்துகொண்டு இருந்தாலும் நூறு வீதம் அவர்களுடைய பிரச்சினைகளை தீர்ப்பதில் பல வகையான கஷ்டங்கள் எங்களுக்கு

> **மக்களால் தெரிவுசெய்யப்பட்ட மாகாண சபை உறுப்பினர்கள் மற்றும் உள்ளூராட்சி உறுப்பினர்கள் இருக்கின்ற காரணத்தினால் மக்களுடைய பிரச்சினைகளை இனங்காண்பது எங்களுக்கு இலகுவாக இருக்கும்.**

இருக்கின்றது. ஏன்றாலும் எதிர் காலத்தில் வெளிநாட்டு உதவியுடனும் நம் அரசாங்கத்தின் உதவியுடனும் கடன்களைப் பெற்று அம் மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு திட்டமிட்டுக்கின்றோம்.

இடம்பெயர்ந்த மக்களில் சிலர் தங்களுடைய வீடுகள் காணிகள் அதி உயர் வலயத்தில் இருப்பதாக கூறுகிறார்கள். அவர்கள் மீளவும் அந்த பிரதேசங்களுக்கே சென்று வாழ விரும்புகிறார்கள். அதற்கான சாத்தியங்கள் எவ்வாறு காணப்படுகின்றது?

> **அரசாங்க அதிபருக்கும் பாதுகாப்பு தரப்பினருக்குமிடையில் நல்லுறவை ஏற்படுத்துகின்ற, சில உணவுப்பொருட்கள் தாமதமாகச் செல்வதைத் தடுக்கின்ற, கல்வி, சுகாதாரம், சமூக ரீதியான பிரச்சினைகளைத் தீர்த்துவைக்கின்ற செயற்பாடுகளில் ஈடுபடுகின்றோம்**

மீள்குடியேற்ற அமைச்சு தன் னிச்சையாக செயல்பட முடியாது. மீள்குடியேற்றத்தை மேற்கொள் கின்றபோது பாதுகாப்பு அமைச்சி னுடைய அனுமதியைப் பெற்ற பின்னர், அந்த பிரதேசங்களில் இருக்கின்ற மிதிவெடிகள் அகற்றப்பட்ட பின்னர்தான் மீள்குடியேற்றத்தை நாங்கள் செய்கின்றோம். சர்வதேச தரத்திலே UNDP உடைய அறிக்கை கிடைத்த பின்னர் தான் நாங்கள் மீள்குடியேற்றங்களை செய்து வருகின்றோம். பாதுகாப்பு அமைச்சினுடைய அனுமதி இல்லாமல், மிதிவெடிகள் அகற்றப்படாமல் இருப்பதால் அப்பகுதிகளில் மீள்குடியேற்ற நடவடிக்கைகள் தாமதப்படுகின்றது. குறிப்பாக பாதுகாப்பு வலயமாக மூதூரிலே சாம்பூர் பிரதேசம் முன்னெடுக்கப்பட்டிருக்கின்றது. எனவே அந்த பிரதேசத்தின் மீள்குடியேற்ற நடவடிக்கைகளுக்காக நாங்கள் பாதுகாப்பு அமைச்சுடன் பேச்சுவார்த்தை நடத்திக்கொண்டிருக்கின்றோம்.

உங்கள் கதைகள்

மீண்டும் வாழ்வோம் வானொலி நிகழ்ச்சியில் புதிதாக உங்கள் கதைகள் இடம்பெறக் காத்திருக்கின்றன. ஒவ்வொரு நிகழ்ச்சியிலும் ஒலிபரப்பாகும் நாடகங்களின் தொகுப்பை மீண்டும் வாழ்வோம் பத்திரிகை வாயிலாகவும் உங்களுக்கு அறியத் தருகின்றோம். வடக்கு கிழக்கு பகுதிகளில் இருந்து பல்வேறு காரணங்களால் இடம்பெயர்ந்து முகாம்களில் வாழும் மக்களின் அடிப்படை உரிமைகளை அவர்களுக்கு எடுத்துக் கூறும் வகையிலே இந்தக் குறு நாடகங்கள் அமைகின்றன. இதன் அடிப்படையில் பெண்களின் உரிமைகளை மையமாகக் கொண்டு அமைந்த 'உயிரை வாங்கும் குடி' குறுநாடகத்தின் தொகுப்பு.

உயிரை வாங்கும் குடி



மீண்டும் வாழ்வோம் வானொலி நிகழ்ச்சியில் வாரா வாரம் உங்கள் கதைகள் பகுதியில் ஒவ்வொரு சம்பவங்களை அடிப்படையாக கொண்டு குறு நாடகங்கள் ஒலிபரப்பாகி வருகின்றமை நீங்கள் அறிந்த விடயமே.

இன்று கிராமப்புறங்களில் அதிகளவில் பாவனையில் இருக்கும் சுகிப்பு என்ற குடிவகைப் பானத்துக்கு அடிமையாகியுள்ளவர்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் உயிரை வாங்கும் குடி என்ற தலைப்பில் குறு நாடகம் ஒலிபரப்பானது.

கூலித்தொழில் செய்து வரும் வரதன், மலனவி பாமினி ஒரு மகன். வரதனின் உழைப்பை நம்பியிருக்கும் சிறிய குடும்பம். வரதனுக்கு சுகிப்புக் கடைதான் தஞ்சம் என்று இருக்கிறார். குடிப்பதற்காக அயலவர்களிடம் பணம் வாங்கித்தருமாறு பாமினியை வற்புறுத்துகிறார். கணவனின் செயலால் ஆத்திரமடையும் பாமினி, வரதன் நிளமும் குடித்து விட்டு வந்து பாமினிக்கு அடித்து சித்திரவதை செய்வதை பார்த்து' பிள்ளைக்கு தாப்பள் மீது பயம்.

நிளமும் சுகிப்பு குடிப்பதால் வரதனுக்கு நோய் ஏற்பட்டு விட்டது. வரதன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்படுகிறார். வரதனை சோதித்த வைத்தியர் வரதனுக்கு வயிற்றில் குடற்புண் ஏற்பட்டிருப்பதாகவும் ஈரல் கேதமடைந்திருப்பதாகவும் கூறுகிறார். இந்த நிலையில் வரதன் குடிப்பழக்கத்தை தொடர்ந்தால் அவரது உயிருக்கு ஆபத்து ஏற்படப் வாய்ப்பு இருப்பதாகவும் கூறுகிறார்.

வரதனின் உடல் நிலை பற்றி வருதனிடம் வைத்தியர் எடுத்துக் கூறுகிறார். சுகிப்பில் கலக்கப்படும் பொருட்கள் பற்றி பேசப்படுகிறது. ஈஸ்ட், கறல் கம்பி, நுளம்புத்திரி, பல்லி வால் ஆகிய பொருட்களை வெறித்தன்மையை அதிகமாக்குவதற்காக சுகிப்பில் கலக்குகார்கள், இதனால் சுகிப்பில் விஷத்தன்மை ஏற்படுகிறது. சுகிப்பு ஆதாவது கள்ளச்சாராயத்தில் இருக்கும் விஷம் கொஞ்சம் கொஞ்சமாக உடலில் ஏற்படுத்தும் விளைவுகள் பற்றி வைத்தியர் தெளிவுபடுத்துகிறார்.

பாமினி தனது கணவர் குடிகாரன் என்பதால் தன்னையும் தனது பிள்ளையையும் தங்களது குடும்பத்தில் எருமே ஆதாரிப்பதில்லை என்று வேதனைப்படுகிறார். அத்தோடு பிள்ளைக்கு தகப்பன் மீது பயமும் வெறுப்பும் ஏற்படுகிறது என்றும் வேதனைப்படுகிறார்.

குடிப்பழக்கத்திற்கு அடிமையாகி இருப்பவர் ஒருவர் என்றாலும் குடும்பத்தில் உள்ள அனைவரும் கஷ்டப்ட வேண்டிய நிலை ஏற்படுகிறது. அத்தோடு சுகிப்பு குடிப்பவர்கள் முற்றாக அதற்கு பழக்கத்தை கை விட வேண்டும் இல்லா விட்டால் நிச்சயமாக அவர்களது உயிருக்கு அதுவே ஆபத்தாகி விடும் என்றும் வைத்தியர் அறிவுரை கூறுகிறார்.

விலை குறைவாக இருப்பதால் வறுமைக் கோட்டுக்கு கீழ் உள்ளவர்கள் கள்ளச்சாராய குடிப்பழக்கத்திற்கு அடிமை ஆகிறார்கள். இந்தக் கள்ளச்சாராயத்தால் உயிரிழப்பவர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து செல்கின்றமைமை ஊடகங்கள் வாயிலாக நிளமும் அறிகின்றோம். எமது மீண்டும் வாழ்வோம் நிகழ்சியின் சார்பில் இந்தப் பழக்கத்திற்கு அடிமையாகி உள்ளவர்களுக்கு விப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில் உயிரை வாங்கும் குடி குறு நாடகம் ஒலிபரப்பாகியது.

மீண்டும் வாழ்வோம் நிகழ்ச்சியின் உங்கள் கதைகள் பகுதிக்கு உங்கள் வாழ்க்கையில் இடம்பெற்ற சம்பவங்களை எழுதி அனுப்புங்கள். இவற்றை நாடக வடிவில் தொகுத்து உங்கள் கதைகளாக ஒலிபரப்ப காத்திருக்கின்றோம். உங்கள் கதைகள் மற்றவர்களுக்கும் படிப்பினையாக அமையும் என்பதே மீண்டும் வாழ்வோம் நிகழ்ச்சியின் எதிர்பார்ப்பாகும்.

தகவல் பெட்டி

இலங்கையில் மனிதாபிமான மற்றும் அரிவிருத்தி உதவிக்கான வழிகாட்டல் கோட்பாடுகள்

சர்வதேச மனித உரிமைகள் சட்டம், சர்வதேச மனிதாபிமானச் சட்டம், இலங்கைச் சட்டம் மற்றும் பிரயோகிக்கப்படக்கூடிய அனைத்து சர்வதேச நியமங்களின் வழிகாட்டல்களின்படி, இலங்கையில் மனிதாபிமான மற்றும் அபிவிருத்தித் உதவிகளை செயற்திறனுடன் அமும்படுத்துவதற்கு ஏதுவாக பின்வரும் வழிகாட்டல் கோட்பாடுகளை கீழே குறிப்பிடப்பட்ட கையொப்பமிட்டோர் மீள் உறுதிப்படுத்துகின்றனர். இதன் கீழ் கையொப்ப மிட்டோர் தங்களது பணியாளர்கள் மற்றும் அவர்களது நடவடிக்கை அமும்படுத்தும் பங்காளர்கள் என்போர் (சர்வதேச/உள்ளூர் அரசசார்பற்ற ஸ்தாபனங்கள், ஐ.நா, ஸெஞ் சிலுவைச் சங்கம் போன்றன) பின்வரும் 10 கோட்பாடுகளை நடைமுறைச் சட்டங்களின் கீழ் இயன்றளவு கடைப்பிடிக்க பெரும் முயற்சி செய்வர்.

8. **ஒருங்கிணைத்தல்:** நாங்கள், எங்களது செயற்பாடுகளை அரசாங் கம் மற்றும் தொடர்புடைய அனைத்து அக்கறையாளர்களுடனும் ஒவ் வொரு மட்டத்திலும் ஒருங்கிணைக்கின்றோம்.

எங்களது செயற்பாடுகள் சர்வதேச அரச சார்பற்ற ஸ்தாபனங்களின் கோட்பாடுகள் மற்றும் செஞ்சிலுவைச் சங்கம்- செம்பிறை இயக்கங்களது ஒழுக்கக் கோவையுடன் நிலையானதாக இருப்பதை நாம் உறுதிப் படுத்த விரும்புகிறோம். மேலதிக தகவல்களுக்கு தயவுசெய்து http://www.ifrc.org/publicat/conduct/code.asp உடன் தொடர்பை ஏற்படுத்தவும். இவ்வழிகாட்டல் கோட்பாடுகள் ஒரு சர்வதேச ஒப்பந்தமோ அல்லது சட்ட

Embassy of the Federal Republic of Germany Colombo · JAPAN Embassy of Japan · The Netherlands Embassy · British High Commission · Embassy of Sweden · European Commission · Embassy of Switzerland · Australian Government AusAID · United Nations · NORWEGIAN EMBASSY · Embassy of the Republic of Korea · Canadian High Commission · The United States Embassy

மீண்டும் வாழ்வோம் (Life Line) செயல்திட்டமானது USAID இனால் நிதியளிக்கப்பட்டு Internews Network இனால் நடைமுறைப்படுத்தப்படுகின்றது

INTERNEWS · USAID FROM THE AMERICAN PEOPLE

இப்பத்திரிகை எக்ஸ்பிரஸ் நியூஸ்பேப்பர்ஸ் (சிலோன்) லிமிட்டெட்டினால் கொழும்பு-14, கிராண்ட்பாஸ் வீதி, 185 ஆம் இலக்கத்தில் 2008ஆம் ஆண்டு ஜூன் மாதம் 08ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.